முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் யாகோபுசித்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

25.10.2018, வியாழக்கிழமை

1. **கலி மீட்பின் குருவே அரங்கா**
**கலி மீட்பின் திருவே தேசிகா**
**அழியாமை ஞானம் தந்தருள**
**அவதாரம் புரிந்த குருராசனே**

2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் **விளம்பி துலை திங்கள்**
**தரணியிலே அட்டம திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 8ம் நாள் 25.10.2018, வியாழக்கிழமை)**
**தவராசனுக்கு ஒளி சூட்சும நூலை**

3. **நூலை யாகோபுசித்தர் யானும்**
நிலவுலக நலம்பெற உரைப்பேன்
ஞாலமதில் உலக மக்களுக்கு
நன்மை செய்ய வேண்டியே

4. வேண்டியே அவதாரம் புரிந்திருக்க
விசாலமாக மாதருமம் துவக்கி
தொண்டு வழி மக்களை அழைத்து
தெய்வீக பலம் தந்து வர

5. வருகவே இனியும் தாமதிக்கா
வந்து அரங்கன் செய்து வரும்
தருமத்தில் பொருளுதவி செய்து
தன்னார்வமிக்க தொண்டர்களாகி

6. ஆகியே உலகோர் இணைந்து
அரங்கன் ஞானம் தருமமதை
அகிலமெங்கும் பரப்பி வருக
அரங்கமகானை அறியும் உணரும்

7. உணரும் மக்கள் எல்லோரும்
உலகமாற்றத்தில் பங்கு பெறுவர்
தனவான்கள் ஞானவான்களாகி
தண்டாயுதன் அருள் பலம் பெறுவர்

8. அருள் பலமுற அரங்கன் சீடர்கள்
அழியாமை தகுதி பெறுவதுடன்
அருள் அடியவர்கள் அனைவரும்
ஆகுவர் ஞானிகள் ஆகவே

9. ஆகவே அரங்கன் தேடிக் காணும்
அன்பர்களாகி நீங்கள் அனைவரும்
மிகையான அறம் வளர்க்க
மேலான ஞானிகள் ஆவரென்பேன்

10. என்கவே ஞானயுகம் அமைக்கும்
ஏழாம் படை வீட்டு ஆசான்
சண்முகன் சடாட்சர சூட்சும
சரவண சோதி சக்தியுமான

11. ஆனதொரு அரங்கன் மூலமே
அரங்கமகான் சீடர்கள் மூலமே
ஞானயுகமாற்றம் நடந்தேறும்
நாட்டிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் யாகோபுசித்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா மாமாயை சூழ்ந்திட்ட கலியுகத்தின் மக்களை அவர்களது அறியாமை எனும் இருள் போக்கி அவர்களை மாயையுள் இருந்து மீட்டு ஞானயுகத்தினராக ஆக்கிடவே உலகின் எல்லா ஞானிகளின் சக்தியையும் ஒன்றிணைத்துக் கொண்டு முருகப்பெருமானின் அவதாரமாக கலியுக மீட்பின் தலைமை ஞானகுருவாக தொண்டர் படை சூழ ஞானியர் துணையுடன் அவதரித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே கலியுக மீட்பின் இறைவனது சக்தி வடிவமே திருவே, ஞானதேசிகா அழியாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வினை உலகினர்க்கு தந்தருளி காத்திடவே அவதரித்த குருராசனே ஞானஅரசே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 8ம் நாள் 25.10.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல் தனையே யாகோபுசித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் யாகோபுசித்தர்.

பல ஜென்மங்களாய் முற்றுப்பெற்று ஒளி தேகம் அடைந்திட்ட போதிலும் மகா ஞானியாக விளங்கிய அரங்கமகா தேசிகனும் கலியுகத்தினில் உலக மக்கள் படுகின்ற துன்பத்தினை போக்கி அவர்களுக்கு நன்மைகள் செய்திடவே அவதாரமாக அவதரித்துள்ளார்.

உலகம் நலம் பெறவே அளவிலாத தர்மங்களை உலகமெங்கும் விசாலமாக செய்து வருகின்றார். அளவிலாத தர்மங்களை துவக்கி அத்தர்ம செயல்களிலே உலக மக்களுக்கு தொண்டுகள் செய்திட வாய்ப்பளித்து தொண்டுகள் செய்வதின் மூலமாக சொல் வாக்குப்படி தொண்டு செய்த மக்களை அழைத்து அவர்களுக்கு தெய்வீக பலத்தினை தந்து வருகின்றார்.

ஆதலினால் மக்களே நீங்கள் இனியும் தாமதிக்க வேண்டாம். உடன் விரைந்து அரங்கன் ஆலயமாம் ஏழாம் படை வீடாய் ஞானிகளால் வழிமொழியப்படுகின்ற துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வருகை தந்து ஆங்கே உலக நலன் கருதி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் செய்து வருகின்ற தானதருமப் பணிகளுக்கு பொருளுதவிகள் செய்தும், தொண்டுகள் செய்தும் அரங்கனின் அறப்பணிகளுக்கு உதவிகள் செய்து தன்னார்வமிக்க தொண்டர்களாக ஆகி, உலக மக்களெல்லாம் ஒன்றிணைந்து அரங்கன் கூறும் ஞான உபதேசங்களையும், தருமங்களையும் உலகமெங்கும் பரப்பி வர வேண்டும்.

உங்களது செயலினால் அரங்கமகா தேசிகனை அறிகின்ற மக்களும், உணர்கின்ற மக்களும் பரப்பிய மக்களும் உலக மாற்றத்தினில் அரங்கன் அருளால் பங்கு பெறுவார்கள். பொருளுதவி செய்த தனவான்கள் ஞானவான்களாக ஆகி முருகப்பெருமானின் அருள் பலத்தினை பெறுவார்கள். அருள்பலம் பெறுகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருட்சீடர்கள் மரணமிலாப் பெருவாழ்விற்கு தகுதி பெறுவதுடன் அருள் அடியவர்களாக ஆகி ஞானிகளாக ஆகிடும் தகுதியை பெறுவார்கள்.

அவர்களெல்லாம் அரங்கமகா தேசிகன் தேடிக் கண்டு கொண்ட அன்பர்களாக ஆகிடுவர். முன்னிலும் அதிகமான அறப்பணிகளை செய்திட செய்திட மேன்மைமிக்க ஞானிகளாக ஆகிடுவர்.

இவ்வுலகினில் ஞானயுகம் அமைத்திட வேண்டியே, சர்வவல்லமையுடன் அமைக்கப்பட்ட ஏழாம் படை வீடு, துறையூர் ஓங்காரக்குடிலாசான் முருகப்பெருமானின் சூட்சும சரவணஜோதி சக்தியுமான ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக, ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருட்சீடர்கள் மூலமாக மட்டுமே ஞானயுக மாற்றம் நடந்தேறும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் யாகோபு சித்தர்.

–சுபம்–